யேற்றுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் தேங்குகிற இடத்தில் அவர்கள் மறைமுகமாக ஒரு வால்வு வைத்து அவ்வப் போது அதைப் பிடுங்கி விடுவதால் சுத்தம் செய்யப்படாமலேயே பெரும்பகுதி நாட்களிலே வந்துகொண்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற கற்களைப் பார்த்தாலே தெரியும், சாம்பல் போன்று பறக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட மோசடியை அங்கே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலக்க விடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப் பார்களா ? தாமிரபாணியில் கலப்பதால் குடிநீர் எடுப்பவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படிப் பாதிக்கப்படாமலிருக்க அந்த ஆற்றிலே கலக்காமல் வேறு இடத்திலே கொண்டுபோய்விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதற்காக ஒரு முறை இருக் கிறது. இத்தனை ஏக்கர் இடம் என்று ஒதுக்கி அந்த இடத்திற்குள்ளே நீரிலே இருக்கின்ற பையாலாஜிக்கல் பொட்டன்சியைக் குறைத்து பிறகு ஆற்றிலே விடுவதுதான் பொருத்தமாக இருக்கும். உலகத்திலே எல்லா இடங்களிலும் இப்படித்தான் செய்யப்படுகிறது. இந்த நிறுவனம் அப்படிச் செய்யவில்லை என்பதால்தான் அவர்களுக்கு ஷோ காஸ் நோட்டிஸ் கொடுத்து கம்பெனியை நிறுத்தக்கூடிய நிலை ஏற்பட்டது. இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் திவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தவறு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS